1974 மார்ச் 21]

Auto-rickshaws in Coimbatore

*549 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to stat —

(a) whether the Police detected a number of auto-rickshaws running in Coimbatore without licences in June 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) ஓட்டுவதற்கான உரிமம் இல்லாது, 22 ஆட்டோரிக்ஷா ஓட்டுநர் வண்டிகளை ஓட்டியதைக் கண்டுபிடித்து அவர்கள்மீது மோட்டார் வண்டிகளின் சட்டத்தின் கீழ் தொடர்புள்ள விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* **550 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர் பழுதுபட்டு விட்டது என சொல்லி பொதுமக்களிடம் மீட்டர் கட்டணத்தை காட்டிலும் அதிகமான பணம் கேட்கிறார்கள் என்பது பற்றிய புகார் மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) கோவையில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர் குறைபாடு உடையதாக இருக்கிறது என்று சொல்லி பொதுமக்களிடமிருந்து மீட்டர் கட்டணத்தைவிட அதிகமாக தொகை வசூலிக்கப்படுகிறது என்பது குறித்து புகார்கள் எதும் வரப்பெறவில்லை. ஆனால், மீட்டரைப் போடாமலே அதிக கட்டணம் கேட்பதாகப் புகார்கள் வந்துள்ளன. நேர்மை தவறிய ஓட்டுநர்கள்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: அவர்கள் எவ்வளவு காலமாக லைசென்ஸ் எடுக்காமல் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டிவருகிறார்கள்? மீட்டர் இல்லாமல் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டி அதிக கட்டணம் பெறுபவர்களின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : லைசென்ஸ் இல்லாமல் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டினார்கள் என்பது காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு காலமாக ஓட்டினார்கள், கண்டுபிடிப்பதற்கு முன்பு என்பதை நிச்சயமாகச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. மீட்டர் கட்டணத்தைவிட அதிகமாக கட்டணம் வாங்குகிறவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். அதற்கும் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு அபராதம் போன்றவைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய லைசென்ஸ்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, due to the high cost of petrol, I think auto-rickshaws are more popular among the public. So will the Government increase the number of auto-rickshows in places like Coimbatore, Madras and Madurai?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there is no such proposal at present.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, ஆட்டோ ரிக்சா, டாக்சிகளில் அதிகக் கட்டணம் கேட்டால் வழக்குத் தொடர வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, பல இடங்களில் ஆட்டோ ரிக்சாக்களையும், டாக்சிகளையும் வாடகைக்கு அமர்த்திச் செல்கின்றவர்கள் 20 மைல், 30 மைல் தூரம் சென்றவுடன் நிறுத்தி விட்டு, டிரைவருக்குத் தெரியாமல் ஓடிவிடுவதும் அல்லது கத்தியைக் காட்டி அவர்களிடம் இருக்கும் பணத்தைப் பிடுங்கி விட்டு ஓடிவிடுவதுமாக இருக்கிறது. ஆகவே ஆட்டோ ரிக்சா, டாக்சி டிரைவர்களுக்கு பாதுகாப்புத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது எல்லாம் சமுதாயக் குற்றங்களே தவிர, போக்குவரத்துத் துறையைச் சார்ந்ததல்ல.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இப்போது பெட்ரோல் விலை கூடிவிட்ட பிறகு, பழைய கட்டணம் அதிகமாகி யிருக்கிறது. மீட்டர்கள் பழைய கட்டண வீதத்தில் பொருத்தப்

1974 மார்ச் 21]

பட்டிருப்பதால் ஓட்டுநர்கள் புதிய கட்டணமாக என்ன தொகை கேட்கிருர்களோ, அதைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. புதியக் கட்டணத்திற்கான அட்டைகளை அவர்கள் காட்டுவதில்லை. ஆகவே, உடனடியாக புதிய கட்டண விதத்தில் மீட்டர்களை மாற்றி அமைக்க உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, புதிய கட்டண விதத்தில் மீட்டர்களை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மீட்டர்கள் திருத்தி அமைக்கப்படும் வரையில் புதிய கட்டண விகிதங்களைக் காட்டுகின்ற அட்டைகளை பயணிகளிடம் காட்டி, அதற்குரிய கட்டணங்களைப் பெற்றுக்கொள்ள உத்தரவு இருக்கிறது. அதற்கு மேற்பட்டு யாரும் வாங்கக்கூடாது.

திரு. இரா. மாணிக்கவாசகம்: தலைவரவர்களே, கோவை ஆட்டோ ரிக்சா சங்கத்திடமிருந்தும், இதர பிற சங்கங்களிடமிருந்தும் 'நாங்கள் மீட்டரைப் பொருத்திக்கொள்கிருேம்; புதிய கட்டணத்தை உடனடியாக அமுல் படுத்திக்கொடுத்தால் அதற்குத் தகுந்தமுறையில் திருத்தி அமைத்துக் கொள்கிருேம்' என்று அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறதா? வந்திருக்கிறது என்ருல் அதன்மீது என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மீட்டர்களைப் பொருத்திக்கொள்வதாளுல் அரசு வரவேற்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

சென்னை நகரில் சமையல் வாயுக்கள்
குறையும் அதனுல் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லலும் குறித்து

THIRU G. R. EDMUND: Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the serious shortage of cooking gas in Madras city causing hardships to the people.